# சிலம்பிலும் ஆங்கில இலக்கியத்திலும் காணப்பெறும் நடையியல் உத்திகள்: ஓர் ஒப்பாய்வு

# Narrative Techniques found in Silambam and English Literature: A Comparative Analysis

***முனைவர் எம். சோலையன்***
மூத்த ஆய்வறிஞர்
இந்திய அரசின் பண்பாட்டு அமைச்சகம்

**Dr. M. Solayan**
*Senior Fellow*
*Ministry of Culture, Government of India*

**Citation**: Solayan, M. "Narrative Techniques Found in Silambam and English Literature: A Comparative Analysis." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 3, 2025, pp. 55-65.

*ஆய்வுச் சுருக்கம்*
*அனைத்துக்கவிஞர்களின்நடையும்அவர்களுடையபார்வையைப்போலமுக்கியமானதாகும்.அவர்கள்சொல்லவருகிற செய்தியும், சொல்லப்படும் விதமும் பிரிக்க இயலாததாகும். ஒவ்வொரு கவிஞனின் கவிதையிலும் தனித்துவமான நடை மிளிரும். இருந்தாலும் சிலம்பினையும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங்கிலக் கவிதைகளையும் படிக்கும்போது, ஒப்பிடத்தக்க வகையிலான நடையியல் உத்திகளை இருவேறு மொழி இலக்கியங்களிலும் காணமுடிகிறது. உவமை, உருவகம், அஃறிணைப் பொருள்களின் மேல் மனித உணர்வு ஏற்றல், உயர்வு நவிற்சி, திரும்பத்திரும்பச் சொற்களைக் கையாளல்,வாக்கியஅமைப்பில்மாற்றம்.அண்மையில் இல்லாரையும்,அஃறிணைப்பொருட்களையும்விளித்துப்பேசுதல் மற்றும் விடை எதிர்பாரா வினாக்கள் ஆகிய நடையியல் உத்திகள் இருவேறு மொழி இலக்கியங்களிலும் கவிதையின் அழகை உயர்த்திக்காட்டப் பயன்படுத்தப்பட்டுள்ளன.*
***குறிச்சொற்கள்:*** *ஒப்பாய்வு, இணைவரை ஆய்வு, சிலப்பதிகாரம், தெரிந்தெடுக்கப்பெற்ற ஆங்கிலக் கவிதைகள், நடையியல் உத்திகள்.*

## Abstract
*In all great writers style is as important as the vision. Moreover, in all great writings what is said is inseparable from how it is said. This research article attempts to analyze how the ideas are expressed to convey the message. In the writings of the different writers, one can come across the different kinds of style. Every writer's style will have its own characteristics. Yet, when one reads the texts of silappathikaram and the selected English poetry, it is obvious that various writers had used similar stylistic devices in order to decorate or to enlighten the ideas they wanted to emphasize. For instance, Elango and various English poets have used simile, metaphor, pathetic fallacy, hyperbole, inversion, apostrophe, repetition, rhetorical questions and alliteration in order to add beauty to their works. This comparative work is only a parallel study.*
***Keywords:*** *Comparison, Parallel Study, Stylistic Devices, Silappathikaram, English Poetry*

## முன்னுரை

*இலக்கியத்தில் கையாளப்படும் நடை என்பது கவிஞர்கள் மொழியை எவ்வாறு தம் கருத்துக்களை வெளியிடப் பயன்படுத்துகிறார்கள் என்பதைக் குறிப்பதாகும். கவிஞர்கள் தமக்கான தனிப்பட்ட முறையில் சொற்களையும் சொற்றொடர்களையும் தேர்ந்தெடுத்துத் தம் கவிதைக்கான தொனியை வெளிப்படுத்துவர். ஆங்கில இலக்கியத்திலும், தமிழில் குறிப்பாகச்*

*சிலப்பதிகாரத்திலும் நடையியல் உத்திகள் எவ்வாறு கையாளப்பட்டுள்ளன என்று ஆய்ந்து காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். உவமை, உருவகம், உயர்வு நவிற்சியணி, முரண் அணி, சொல்லைத் திரும்பத்திரும்பக் கூறல், அஃறிணைப் பொருட்களுக்கு மனித உணர்வை ஏற்றிக்கூறல், விடை எதிர்பாரா வினாக்கள், தம்முன் இல்லார் மற்றும் கேளார் மாட்டு விளித்துப் பேசுதல், வாக்கியத்தில் எழுவாய், பயனிலை இடம் மாறி வருதல் மற்றும் ஓசை நயம் ஆகிய நடையியல் உத்திகள் சிலப்பதிகாரத்திலும், ஆங்கில இலக்கியத்திலும் கையாளப் பெற்றிருப்பதை இக்கட்டுரை எடுத்துக்காட்டுகிறது.*

**உவமை மற்றும் உருவகம்**

*இளங்கோவடிகள் தம் காப்பியத்தில் பொருள்களையும் செயல்களையும் விளக்கிட உவமைகளையும் உருவகங்களையும் சிறப்பாகக் கையாண்டுள்ளார்.*

*ஜேம்ஸ் ரீவ்ஸ் என்னும் திறனாய்வாளர் தம்முடைய "கவிதையைப்புரிந்து கொள்ளுதல்" என்னும் தலைப்பிலான நூலில், "கவிஞர்கள் அடுக்கடுக்கான உவமைகளைக் கொண்டு பெண்ணழகின் சிறப்பை வாசகர்களுக்கு உணர்த்துவர்" என்று குறிப்பிடுகிறார். இக்கூற்று ஆங்கிலக்கவிஞர் பென் ஜான்ஸன் மற்றும் இளங்கோ வடிகளின் படைப்புகளில் நன்கு விளக்கப்பட்டுள்ளது. பென் ஜான்ஸன் பெண்ணின் அழகை இயற்கைப் படிமங்களுடன் ஒப்பிடுகிறார்.*

Have you seen but a bright lily grow
Before rude hands have touched it;
Have you marked but the fall of the snow
Before the soil hath smutched it?
Have you felt the wool of beaver
or swan's down ever?
or have smelt O' the bud O' the brier
or the nard in the fire?
or have tasted the bag of the bee
O so white, so soft, O so sweet is she!

*கோவலன் உருவகங்களையும் உவமைகளையும் கொண்டு கண்ணகியின் அழகைப் போற்றிப் பாடுகிறான். அவனுடைய புகழுரையில் கண்ணகியை இயற்கைப் படிமங்களுடன் ஒப்பிடுகிறான்.*

***மாசறு பொன்னே! வலம்புரி முத்தே***
***காசறு விரையே! கரும்பே! தேனே!***
***அரும் பெறற் பாவாய்! ஆர் உயிர் மருந்தே!***
***மலையிடைப்பிறவா மணியே என்கோ?***
***அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ?***
***யாழிடைப்பிறவா இசையே என்கோ? (2.73-79)***

*துருத்தி உலையிலிருந்து எழும் தீயினைச் சினத்தினால் எழும் தீக்கு உருவகப்படுத்திக் கூறுவது ஆங்கில இலக்கியத்தில் ஷேக்ஸ்பியரால் கையாளப் பட்டுள்ளது. நார்ஃபோக் பிரபு, பக்கிங்ஹாம் பிரபுவிற்கு அறிவுரை கூறும்போது சினத் தீயைத் துருத்திஉலைத் தீயைப் போல வெப்பப்படுத்தினால், அத்தீயில் மூட்டியவரே அகப்பட வேண்டிவரும் என்று கூறுகிறார். எட்டாம் ஹென்றி அரசர் என்னும் நாடகத்தில் இவ்வறிவுரை தரப்படுகிறது.*

Norfolk. Be advised.
Heat not a furnance for your foe so hot
That it do singe yourself. (1.1.140-141)

உலைக்களத்துத் துருத்திமுனைத்தீயைத் தம் இலக்கியத்தில் வெவ்வேறு இடங்களிலும் உவமையாக இளங்கோ பயன்படுத்தியுள்ளார்.

கோவலனும், கண்ணகியும் மதுரைக்கு நடந்து செல்வதை இளங்கோவடிகள் வர்ணிக்கிறார். தன் மனைவியும் தன்னோடு காட்டு வழியே நடந்து வந்து படு;ம் துயரினை நினைத்த கோவலன் ஊது உலைத்துருத்தியின் செந்தீயைப் போலப் பெரு மூச்செறிந்தான். இவ்விடத்தில் இளங்கோ உவமையணியைப் பயன்படுத்தியுள்ளார்.

**காதலி தன்னொடு கானகம் போந்ததற்கு / ஊதுலைக்குருகின் உயிர்த்தனன் கலங்கி (13.45-46)**

மதுரை நகருக்குள் சென்ற கணவன் திரும்பி வராதது கண்டு வருந்துகிறாள் கண்ணகி. துன்பம் கட்டுக்கடங்காத தாகின்றது. துருத்தி முனை நெருப்பின் வெம்மையும் தோற்குமாறு அவள் நெஞ்சம் அழல் எழ உயிர்க்கின்றது. இங்கே கவிஞர் கண்ணகியின் நெஞ்சத்தைத் துருத்திமுனை நெருப்பிற்கு ஒப்பிடுகிறார்.

**காதலன் காண்கிலேன். கலங்கி நோய் கைம்மிகும் / ஊதுலை தோற்க உயிர்க்குமென் நெஞ்சன்றே (18.12-13)**

கோவலன் இறந்துபட்டதும், கணவனை இழந்துவிட்ட பிரிவுத்துயரோடு உள்ளம் கொதித்து உலைக்களத்துத் துருத்தி முனைச் செந்தீயைப் போலச் சுடுமூச் செறிந்தாள் கண்ணகி.

**காதலற் கெடுத்த நோயொடு உளங்கனன்று /ஊது உலைக் குருகின் உயிர்த்தனள் உயிர்த்து / மறுகிடைமறுகும் கவலையிற்கவலும் (22.151-153)**

கவுந்தியடிகளும், கண்ணகியும், கோவலனும் மதுரை நோக்கி நடந்து செல்லும்போது, இரவில் நிலவொளியின் வெளிச்சத்தில் நடந்து செல்வதே உகந்தது என்று முடிவு செய்கிறார்கள். சூரியனின் வெப்பத்திலிருந்து தப்புவதற்காக, அவர்கள் சூரியன் மறைகின்ற சமயத்தை நோக்கிக் காத்திருந்தனர். கொடுங்கோல் வேந்தனின் ஆட்சியிலே வாழுங்குடிகள் அவன் மறைவை ஆவலுடன் எதிர்பார்ப்பதுபோலக் காத்திருந்தனர். கொடுங்கோல் அரசனின் மறைவையும், சூரியனின் மறைவையும் ஒப்பிட்டு ஆசிரியர் காட்டுகிறார்.

**கொடுங்கோல் வேந்தன் குடிகள் போலப்ஃ படுங்கதிர் அமையும் பார்த்திருந்தோர் (13.15-16)**

"உன் கணவனைக் கள்வன் என்று கொன்று விட்டனர்" என்று ஆயர் மகள் ஒருத்தி அறிவித்ததும் கண்ணகி பொங்கி எழுந்தாள். நிலவு பொழியும் திங்கள் தன்னைச் சூழ்ந்த கார்மேகத்தோடும் பெருநிலத்திலே வீழ்ந்ததுபோலத் தரையிலே முகஞ்சேர மயங்கி விழுந்தாள். இங்கு உவமை பயன்படுத்தப்பட்டுள்ளது.

**பொங்கி எழுந்தாள்; விழுந்தாள் பொழிகதிர்த் / திங்கள் முகிலொடுஞ் சேணிலம் கொண்டெனச் / செங்கண் சிவப்ப அழுதாள் (18.30-32)**

பாண்டியன் நெடுஞ்செழியன் கோவலைனத் தண்டித்தது தவறு என்றுணர்ந்து உயிரைவிட்டான். உடன் பாண்டிமா தேவியும் உயிர் நீத்தனள். அரண்மனைப் பணியாளர்கள் அனைவரும், ஏவற்பெண்டிரும் ஓவியத்திரள் போலப் பேச்சு இழந்தவராக மயங்கி இருந்தனர். ஆசான் பெருங்கணி, அறக்களத்து அந்தணர் ஃகாவிதி, மந்திரக்கணக்கர் தம்மொடு கோயில் மாக்களும், குறுந்தொடி மகளிரும் ஃஓவியச் சுற்றத்து உரையவிந்து இருப்ப (22.8-11)

*கௌசிகன் கோவலனிடம் மாசாத்துவானும் அவனுடைய மனைவியும் பெறுதற்கரிய மணியை இழந்த நாகம் போலப் பெரிதும் வாடினர் என்றும் உற்றார் எல்லாம் உயிர் இழந்த உடல்போலத் துயர்க்கடலில் ஆழ்ந்தனர் என்றும் உவமையுடன் கூறுகிறான்.*

***இருநிதிக் கிழவனும் பெருமனைக் கிழத்தியும்***
***அருமணி இழந்த நாகம் போன்றதும்,***
***இன்னுயிர் இழந்த யாக்கை என்னத்***
***துன்னிய சுற்றம் துயர்க்கடல் வீழ்ந்ததும் (13.57-60)***

*மேலும் இராமன் காட்டிற்குச் சென்றபோது அயோத்தி மக்கள் வருந்தியது போலக் கோவலனின் பிரிவினாலும் புகார் நகரம் முழுவதுமே கலங்கியுள்ளது என்று கௌசிகன் உவமை நயத்துடன் கூறுகிறான்.*

***பெருமகன் ஏவல் அல்லது அருங்கான் அடைந்த / அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப் / பெரும்பெயர் மூதூர் பெரும்பேது உற்றதும் (13.63-65)***

*கோவலனும் கண்ணகியும் மதுரை நகர மதிற்சுவரை அடைகிறார்கள். அங்கே ஆயிரங் கண்ணோனான தேவர்க்கரசனின் அருங்கலங்கள் பெய்து விளங்கும் பெட்டகத்தினை வாய்திறந்து வைத்தாற்போல் மதுரை நகரம் வளமுடனும் எழிலுடனும் விளங்கித் தோன்றியது. இங்கும் உவமையணியை இளங்கோ பயன்படுத்துகிறார்.*

***ஆயிரம் கண்ணோன் அருங்கலச் செப்பு / வாய் திறந்தன்ன மதிலக வரைப்பில் (14.68-69)***

*அறநெறி வாழ்வோர் “மறச் செயல்களைக் கைவிடுக” என்று தம் நாவினையே குறுந்தடியாகக் கொண்டு வாய்ப்பறையினை அறைந்து அறைந்து எடுத்துக் கூறினாலும் யாப்பறை மாக்கள் அதனை ஏற்றுக் கொள்ளமாட்டார் என்று கவிஞர் கூறுகிறார். இங்கு உருவகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. நாவைக் குறுந்தடியாகவும், வாயைப் பறையாகவும் கவிஞர் உருவகிக்கிறார்.*

***மறத்துறை நீக்குமின், வல்வினை ஊட்டும் என்று***
***அறத்துறைமாக்கள் திறத்தின்சாற்றி நாக்கடிப்பு***
***ஆக வாய்ப்பறை அறையினும் யாப்பறை***
***மாக்கள் இயல்பிற் கொள்ளார் (14.27-30)***

*வேந்தருக்கான அணிகலன்களை நன்கு சமைப்பவன் நான் என்று கூற்றத்தூதன் கூறினான் என்று கவிஞர் பேசுகையில் உருவகம் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

***அடியேன் அறியேன்; ஆயினும் வேந்தர் /முடிமுதற் கலன்கள் சமைப்பேன் யான் எனக் /கூற்றத்தூதன் கைதொழுது ஏத்த (16.113-115)***

*“கள்வனோ என் கணவன் என்று கதிரவனைப் பார்த்துக் கண்ணகி கேட்கக் கதிரவனும் “கோவலன் கள்வன் அல்லன் கருங்கயற்கண் மாதராய்” என்று விடைதருகிறான். கருங்கயற்கண் மாதர் என்பதில் உருவகம் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

***“காய்கதிர்ச் செல்வனே! கள்வனோ என் கணவன்? / “கள்வனோ அல்லன்; கருங்கயற்கண் மாதராய்”” (18.51-52)***

*இதே போலக் கீழ்க்கண்ட வரியிலும் உருவக அணி பயின்று வருகிறது.*

***நின்றாள், நினைந்தாள் நெடுங்கயற்கண் நீர்சோர (19.13)***

**ஓசைநயம்**

*“தி ரைம் ஆஃப் என்ஷியன்ட் மாரினர்” என்னும் கவிதையில் அடுத்தடுத்த சொற்களில்*

*ஒரே ஓசையைப் பயன்படுத்துகிறார் கோலரிட்ஜ் என்னும் ஆங்கிலக் கவிஞர்.*

**"The white foam flew / The furrow followed free" (Part II 21-22.)**

*இந்த உத்தி* "Alliteration" *என அழைக்கப்பெறும். சிலப்பதிகாரத்திலும் இளங்கோ இவ்வுத்தியைப் பயன்படுத்துகிறார்.*

*அடுத்தடுத்து வரும் சொற்களின் முதல் எழுத்து ஒன்றாக அமையும் ஓசை உத்தியைக்* (Alliteration) *கவிதையை அழகூட்டவும் கண்ணகியின் துயரைப் பெரிது படுத்திக்காட்டவும் இளங்கோ பயன்படுத்தியுள்ளார்.*

***நின்றாள் நினைந்தாள் நெடுங்கயற்கண் நீர சேரீ என்னும் வரியில் இவ்வுத்தியைக் காணலாம். (க272)***

*இதே போல, வேறோரிடத்தில் புலந்தனள்; புரண்டனள்; பொங்கினள் (23.106) என்று இவ்வுத்தியைப் பயன்படுத்தியுள்ளார்.*

**முரண்பாட்டணி**

*தர்க்கவியலுக்கு ஒவ்வாத முரண் அணியினை* (Paradox) *ஆங்கில இலக்கியத்தில் காணலாம். 'சாவே, நீ பெருமைப்படாதே' எனும் தலைப்பில் ஜான் டன் எழுதிய கவிதையில் சாவே, நீ சாகக் கடவாய் என முரண்பாட்டணியைப் பயன்படுத்தி எழுதுகிறார்.* Death thou Shalt die (14)

*முரண்பாட்டணியினை* (Paradox) *இளங்கோவும் பயன்படுத்தியுள்ளார்.*

***கம்பலை மாக்கள் கணவனைத் தாங்காட்டச் / செம்பொற்கொடி அனையாள் கண்டாளைத் தான் காணான் (19.29-30)***

*"கண்டாளைத் தான் காணான்" எனுமிடத்தில் முரண்பட்ட சொற்கள் அமைந்துள்ளன. அதே பாடலின் இறுதி வரியில் "கண்டாள், அவன் தன்னைக் காணாக் கடுந்துயரம்" என்று முரண்பாடு தோன்ற எழுதியுள்ளார் கவிஞர்.*

**வாக்கிய அமைப்பில் மாற்றம்**

*எழுவாய் பயனிலைகளை மாற்றியமைத்துக் கவிதை இயற்றும் பாங்கு* (inversion) *ஆங்கில இலக்கியத்தில் காணக்கிடக்கிறது.*

*வேர்ட்ஸ்வொர்த் தம்முடைய "நான் மேகத்தைப் போலத் தனிமையில் அலைந்தேன்" என்னும் தலைப்பிலான கவிதையில் "பத்தாயிரம் மலர்களைப் பார்த்தேன் நான் என்று கூறுகிறார். எழுவாய் பின்னுக்குத் தள்ளப்பட்டுப் பயனிலையும், செயப்படு பொருளும் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளன. இதனால் கவிதையின் அழகு கூடுகிறது.*

"Ten thousand saw I at a glance/ Tossing their heads in sprightly dance" (11-12)

*எழுவாய் பயடினிலைகளை மாற்றியமைத்து எழுதும் பாங்கு சிலம்பிலும் காணப்பெறுகிறது.*

*"குருகே" எம் கானலிடத்து வந்து நீ அடையாதே என்று கூறுவதை,*

***"அடையல் குருகே! அடையல் எம்கானல் அடையல் குருகே! அடையல் எம்கானல்***

***(7.43-44)***

*என்று எழுதியுள்ளார் கவிஞர். இங்கு பயனிலை முன்னராகவும், எழுவாய் பின்னராகவும் கூறப்பட்டுள்ளது. கொல்லன் கோவலனிடம் உரையாடும்போது, வேந்தரின் முடிமுதற்கலன்கள் சமைப்பேன் யான் (16.114) என்று கூறுகிறான். இயல்பாக அது 'யான் வேந்தரின் முடிதற்கலன்கள் சமைப்பேன்' என்று வரவேண்டும்;*

**கோவலனைத் தன்குடிலில் இருக்குமாறு கூறும்பொழுதும் இவ்வுத்தியைக் கொல்லன் பயன்படுத்திப் பேசுகிறான்**

*"என் சிறுகுடில் அங்கண் இருமின் நீர் (16.124) "நீர் இருமின்" என்று கூறாமல் "இருமின் நீர்" என்று கூறுகிறான் கொல்லன். மன்னன் ஆணைக்கிணங்கக் காவலன் சென்று கோவலனைக் கொன்றுவிடுகிறான். இதனைக்கூறுகையில் வாக்கிய அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துகிறார் கவிஞர்.*

***கல்லாக் களி மகன் ஒருவன் கையில்***
***வெள்வாள் எறிந்தனன் விலங்கூடறுத்தது***
***புண்ணுமிழ் குருதி பொழிந்துடன் பரப்ப***
***மண்ணக மடந்தை வான்றுயர் கூரக்***
***காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்***
***கோவலன் பண்டை ஊழ்வினை உருத்து. (16.212-217)***

*"கோவலன் வீழ்ந்தனன்" என்று கூறாமல், "வீழ்ந்தனன் கோவலன்;" என்று கூறுவதால் அரசனின் கொடுமை பெரிதுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது.*

**விளித்துப் பேசும் உத்தி**

*தம்முன் இல்லாதோரை விளித்துப் பேசும் முறை* (Apostrophe) *ஆங்கில இலக்கியத்தில் காணப்பெறுகிறது. அப்படி அழைக்கப்படுபவர் சொற்களைக் கேட்க இயலா நிலையிலோ அல்லது பதிலளிக்க இயலாத நிலையிலோ இருக்கக்கூடும்.*

*ஆங்கிலக் கவிஞர் ராபர்ட் பர்ன்ஸ் தம்முடைய "இனிய ஆஃப்டன்" என்னும் கவிதையில் புறாக்களையும், கருப்புப் பறவைகளையும், நீர்ப்பறவைகளையும் ஒலியொழுப்பா திருக்கக் கட்டளையிடுகிறார். அவருடைய காதலியின் உறக்கத்தைக் கலைக்கலாகாது என்பது அவருடைய கருத்தாகும்.*

Thou stock dove whose echo resounds through the glen
Ye wild whistling black birds in yon thorny den
Thou green-crested lapwing, Thy screaming forbear
I charge you, disturb not my slumbering fair (5-8)

*இளங்கோவும் தம் காப்பியத்தில் விளித்துப் பேசும்* (Apostrophe) *உத்தியைக் கையாண்டுள்ளார். காவிரியை விளித்துக் கோவலன் பாடுவது போல அமைத்த வரிகளில் இவ்வுத்தி பயன்பட்டுள்ளது.*

***உழவர் ஓதை, மதகு ஓதை***
***உடைநீர் ஓதை, தண்பதங்கொள்***
***விழவர் ஓதை சிறந்து ஆர்ப்ப***
***நடந்தாய்; வாழி காவேரி! (7.4-7)***

*பிறிதொரு இடத்தில், அம்மென் இணர அடும்புகாள்ஃ அன்னங்காள்! நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்! (7.31-32) என்று கவிஞர் அரும்புகளையும் அன்னங்களையும் விளித்துப் பேசுமாறு அமைத்துள்ளார். மற்றோரிடத்தில் குருகை விளித்துப் பேசுவதுபோல "அடையல் குருகே! அடையல் எம்கானம்' என்று எழுதியுள்ளார்.*

*பகடு ஒன்றிடம் பேசுவதுபோலக் கவிஞர் கவிதைபுனைந்துள்ளார்.*

***வடதிசை மன்னர் மன்னெயின் முருக்கிக்***
***கவடி வித்திய கழுதையேர் உழவன்***

***குடவர் கோமான் வந்தான்; நாளைப்***
***படுநுகம் பூணாய், பகடே! (27.225-228)***

*கோசிகன் கோவலனை அடையாளங் காண்பதற்காக மாதவிக் கொடியிடம் பேசுவது போலப் பேசுகிறான்:*

***கோவலன் பிரியக் கொடுந்துயர் எய்திய மாமலர்***
***நெடுங்கண் மாதவி போன்று, இவ் அருந்திறல்***
***வேனிற்கு அலர் களைந்து, உடனே, வருந்தினை***
***போலும் நீ மாதவி! (12.48-51)***

*கோசிகன் "வேனிற்காலத்து வெப்பத்தினால் வருந்தினையோ மாதவி?" என்று வினவுகிறான். இங்கு விளித்துப்பேசும் உத்தி பயன்பட்டுள்ளது.*

**உயர்வு நவிற்சியணி**

*உயர்வுநவிற்சியணி* (hyperbole) *ஆங்கில இலக்கியத்தில் சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளது. ஆன்ட்ரூ மார்வெல் என்னும் ஆங்கிலக் கவிஞர் தம்முடைய "அவனுடைய நாணும் காதலிக்கு" என்னும் கவிதையில் உயர்வு நவிற்சியணியைக் கையாண்டுள்ளார். தம்முடைய காதலியின் கண்களின் அழகைப் புகழ்ந்து பேச நூறு ஆண்டுகள் தேவை என்கிறார் அவர். இருநூறு ஆண்டுகள் அவளுடைய மார்பகங்களைப் புகழ்ந்து பேசத் தேவை என்கிறார். மேலும், முப்பதாயிரம் ஆண்டுகள் அவளுடைய மற்ற உறுப்புகளின் அழகை வியந்து போற்றத் தேவைப்படுவதாகக் கூறுவது மிகைப்படுத்தப்பட்ட கூற்றாகும்.*

An hundred years should go to praise
Thine eyes, and on thy forehead gaze;
two hundred to adore each breast,
But thirty thousand to the rest, (13-16)

*சிலம்பிலும் உயர்வு நவிற்சியணி* (Hyperbole) *சேர அரசனை நீண்டு வாழுமாறு மாடலன் பேசும் பேச்சில் கையாளப்பட்டுள்ளது. "மண்ணினை ஆளுகின்ற வேந்தனே! நின்வாழ் நாட்கள் தண்மையான பொருநையாற்று மணலினும் மிகுதியாக விளங்குமாக" என்று மாடலன் வாழ்த்திப் பேசுகிறான்.*

***மண்ணாள் வேந்தே! நின் வாழ்நாட்கள் / தண்ணான் பொருநை மணலினும் சிறக்க!***
***(28.125-126)***

*கோவலனைப் பற்றிக் கூறும் கவிஞர் உயர்வு நவிற்சியணியுடன் பாடுகிறார். அவன் வாணிகத்திற்காகப் பல நாடுகளுக்கும் சென்றுவந்த புகழை உடையவன். நிலவு முக மகளிர்கள், பண்ணை வென்ற மகளிர் கூடும் கூட்டத்தில் கண்ணாரக் கண்டு விதந்து எடுத்துப் போற்றப்படும் செவ்வேள் இவன்' என்று புகழ்வார்கள்.*
*அவனும் தான்,*

***மண் தேய்த்த புகழினான்; மதிமுக மடவார்தம்***
***பண் தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்***
***கண்டு ஏத்தும் செவ்வேள் (1.35-38)***

*கண்ணகியைப் பற்றிக் கூறும்பொழுது, செந்தாமரைப் பூவிலே வீற்றிருக்கின்ற திருமகளின் புகழ் மிகுந்த வடிவினை உடையவள். "தீதற்ற வடமீனின் திறம் இவள் திறம்" என்று ஊர் மாதர்கள் போற்றக்கூடிய இயல்பினள் என்று கவிஞர் கூறுகிறார்.*
*போதில் ஆர் திருவினாள் புகழ் உடை வடிவு என்றும்*

***தீது இலா வடமீனின் திறம் இவள் திறம் என்றும்***
***மாதரார் தொழுது ஏத்த வயங்கிய பெருங்குணத்துக்***
***காதலாள்! பெயர் மன்னும் கண்ணகி என்பாள் மன்னோ. (1.26-29)***

**மனிதப் பண்புபெறும் அஃறிணைப் பொருட்கள்**

*அஃறிணைப் பொருட்களுக்கு மனிதப் பண்பை ஏற்றிக் கூறும் உத்தி* (Pathetic Fallacy) *ஆங்கில இலக்கியத்தில் காணப்பெறுகிறது. மில்டன் எழுதிய "இழந்த சுவர்க்கம்" என்னும் காப்பியத்தில் மனிதனின் வீழ்ச்சிக்குப் பிறகு பூமி புண்பட்டதாகவும், இயற்கை பெருமூச்சு விட்டு எலலாமே இழந்துபோனது என்று துயரப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

"Earth felt the wound, and Nature from her seat / Sighing through all her works gave signs of woe / That all was lost" (9.1000-1002)

*அஃறிணைப் பொருள்களுக்கு மனிதப் பண்புகளை ஏற்றிக்கூறல் என்னும் உத்தி* (Pathetic Fallacy) *இளங்கோவால் கையாளப் பெற்றுள்ளது.*

*ஆனிரை கொள்ள வேற்றூருக்கு வீரன் செல்கையில் கரிக்குருவி அவனுக்கு நேரப் போகும் கேட்டினைத் தன் கடுங்குரலால் இசைத்துக் காட்டும்.*

***வேற்றூர்க் கட்சியுட் காரி கடிய***
***குரல் இசைத்துக் காட்டும் போலும் (12.11-12)***

*கோவலனும், கண்ணகியும் காவற்காடு சூழ்ந்த அகழியைச் சுற்றிச் சென்றனர். அவர்கள் உறப்போகின்ற துன்பத்தை ஐயமின்றி முன்னரே அறிந்தனபோல, வண்டினம் ஒலி செய்யக் குவளையும், ஆம்பலும் கமலமும் கண்ணீர் நிறைந்து தாள்கள் நடுங்கச் சோர்ந்தன. வெற்றிக் கொடியாக மேலே பறக்கிற மதுரைப் பேரூரின் நெடுங்கொடியானது "நீவிர் இவ்வூருக்குள் வாராதீர்" என்பது போல மறித்துக் கைகாட்டியபடியே பறந்து கொண்டிருந்தது.*

***தையலும் கணவனும் தனித்து உறுதுயரம் ஐயம் இன்றி***
***அறிந்தன போலப் பண்ணீர் வண்டு பரிந்து இனைந்து ஏங்கிக்***
***கண்ணீர் கொண்டு கால் உறநடுங்கப் போர் உழந்து***
***எடுத்த ஆர் எயில் நெடுங்கொடி "வாரல்"***
***என்பனபோல், மறித்துக்கைகாட்ட (13.185-190)***

*வையைநதியும் கண்ணகிக்கு வரும் துயரினைத் தான் முன்னரே அறிந்தவளைப் போலப் புண்ணிய நறுமலர் ஆடைகளால் தன் மேனிமுழுவதும் போர்த்தித் தன் கண்களில் மிகுந்த கண்ணீர்வெள்ளத்தையும் உள்ளடக்கிக் கொண்டு அமைதியாக விளங்கினாள்.*

***வையை என்ற பொய்யா குலக்கொடி***
***தையற்கு உறுவது தான் அறிந்தனள் போல்***
***புண்ணிய நறுமலர் ஆடை போர்த்துக்***
***கண்நிறை நெடுநீர் கரந்தனள் அடக்கி (13.170-173)***

**விடையை எதிர்பாரா வினாக்கள்**

*ஜியோஃப்ரே என் லீச் என்னும் திறனாய்வாளர் விடையை எதிர்பாராத வினா* (Rhetorical question) *என்பது இலக்கிய நடையை உயர்த்திக்காட்ட வல்லது என்பார். "வெனிஸ் நகரத்து வணிகன்" என்னும் தம் நாடகத்தில் ஷேக்ஸ்பியர் ஷைலக் பேசுவது போன்று விடை எதிர்பாரா வினாக்களை எழுப்புவார். "எங்களைக் கூர்மையான பொருளால் குத்தினால் இரத்தம் வடியாதா? சிரிப்பு மூட்டினால் சிரிக்கமாட்டோமா? நஞ்சூட்டினால்,*

*சாகமாட்டோமா? நீங்கள் எங்களுக்குத் தீங்கு இழைத்தால், நாங்கள் பழி வாங்க மாட்டோமா?" என்று ஷைலக் வினவுகிறார்.*

If you prick us, do we not bleed?
If you tickle us, do we not laugh?
If you poison us, do we not die?
And if you wrong us, shall we not revenge? (3.1.58-61)

*விடையை எதிர்பாரா வினா எழுப்பும் உத்தி சிலம்பிலும் கையாளப்பட்டுள்ளது. தான் செய்தது தவறு என்பதை உணர்ந்த பாண்டியன்,*

***யானோ அரசன்? என்று கேட்கிறான். இக்கேள்விக்கு அவன் பதிலை எதிர்பார்க்கவில்லை.***
***யானே கள்வன் எனத்தானே விடையிறுத்துக் கொள்கிறான். (20.74)***

*குற்றம் இழைக்காத கோவலனை மன்னவன் கொன்றுவிட்ட செய்தி யறிந்த கண்ணகி பெரும் துயரத்தில் பல வினாக்களை எழுப்புகிறாள். அவற்றுக்கு அவள் விடை எதிர்ப்பார்க்கவில்லை.*

***பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும் உண்டுகொல்? / கொண்ட கொழுநர் உறுகுறை***
***தாங்குறூஉம் / பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும் உண்டுகொல்? (19.51-53)***

*இவ்வாறே "சான்றோரும் உண்டுகொல்? என்றும் 'தெய்வமும் உண்டுகொல்" என்றும் வினவுகின்றாள். இவ்வினாக்கள் விடை எதிர்பாரா வினாக்கள்* rhetorical Question *என்ற உத்தியில் எழுப்பப் பெற்றவையாகும். கண்ணகியின் துயரநிலையை உணர்த்தும் பொருட்டு வினாவினைத் திரும்பத் திரும்பக் கேட்கும் வகையில் கவிஞர் அமைத்துள்ளார்.*

*தரையிலே கொல்லப்பட்டு வீழ்ந்துகிடக்கும் கோவலனின் உடலைப்பார்த்து கண்ணகி எழுப்பும் வினாக்களுக்கு அவள் விடையை எதிர்பார்க்கவில்லை.*

***"பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடப்பதோ?... / தார்மலி மணிமார்பம் தரைமூழ்கிக்***
***கிடப்பதோ?... / புண்பொழி குருதியராய்ப் பொடியாடிக்கிடப்பதோ?... (19.39-40,48)***

*மேற்கண்ட வினாக்கள் அவளுடைய துயரத்தின் உச்ச நிலையைக் காட்டுவனவாகும்.*

**சொல்லைத் திரும்பத்திரும்பப் பயன்படுத்துதல்**

*ஷேக்ஸ்பியரின் "ஒதெல்லோ" என்னும் நாடகத்தில் திரும்பத்திரும்ப ஒரே சொல்லைப் பயன்படுத்தும் உத்தி (சுநிநவவைழைண) இடம்பெற்றுள்ளது. ஒதெல்லோ அமைதியான மனநிலைக்கும், திருப்தியான மனநிலைக்கும் விடை தருகிறான்.* "farewell" *என்னும் சொல்லைத் திரும்பதிரும்பப் பயன்படுத்துகிறான்.*

"O, now for ever farewell the tranquil mind! farewell content
Farewell the plumed troop and the big wars
That makes ambition virtue! O, farewell!" (3.3.350-352)

*திரும்பத் திரும்பச் சொல்லி வலியுறுத்துதல் என்ற உத்தி* (Repetition) *பல இடங்களில் இசையின்பத்தைக் கூட்டவும், சொல்லுங்கருத்தை வலியுமையுறச் செய்யவும், துன்ப நிலையை உயர்த்திக்காட்டவும், இளங்கோ பயன்படுத்தியள்ளார்.*

***கொற்றவையை வாழ்த்தி வணங்கிய போது, பின்வருமாறு பாடுகிறார்:***
***வானோர் வணங்க, மறைமேல் மறையாகி***
***ஞானக் கொழுந்தாய் நடுக்கு இன்றியே நிற்பாய்.***
***விரிகதிர் அம்சோதி விளக்கு ஆகியே நிற்பாய்***
***மங்கை உருவாய் மறை ஏத்தவே நிற்பாய். (12.9)***

*காப்பியத் துவக்கத்தில் இளங்கோ இயற்கையைப் போற்றித் துவங்குகிறார்.*

***திங்களைப் போற்றுதும் திங்களைப்போற்றுதும்***
***ஞாயிறு போற்றுதும் ஞாயிறுபோற்றுதும்***
***மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்***
***பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்(1.1,4,6,8)***

*இவ்வாறு போற்றிப்பாடும்போது கவிஞர் சோழ அரசனின் சிறப்பைப் போற்றியிருக்கிறார்.*

*“பாடுகம்” என்ற சொல்லை மீண்டும் மீண்டும் பயன்படுத்திக் கண்ணகியை வியந்து பாடுவோம் என்று கவிஞர் கூறுகிறார்.*

***பாடுகம் வா தோழி, யாம் பாடுகம்;***
***கோமுறை நீங்கக் கொடி மாடக் கூடலைத்***
***தீமுறை செய்தாளை ஏத்தியாம் பாடுகம்***
***தீமுறை செய்தாளை ஏத்தியாம் பாடுங்கால்... (24.11)***

*பாண்டிமாதேவி அவைக்கு வந்தபோது, பணிப்பெண்களின் ஊழியத்தைச் சிறப்பாகப் படம் பிடித்துக்காட்டுகிறார் கவிஞர். 'ஏந்தினர்" என்னும் சொல்லைத் திரும்பத்திரும்பப் பயன்படுத்திப் பாண்டிமாதேவியின் பெருமையை விளக்குகிறார்.*

***ஆடி ஏந்தினர், கலன் ஏந்தினர்***
***அவிர்ந்து விளங்கும் அணி இழையினர்***
***கோடி ஏந்தினர் பட்டு ஏந்தினர்***
***கொழுந்திரையலின் செப்பு ஏந்தினர்***
***வண்ணம் ஏந்தினர் சுண்ணம் ஏந்தினர்***
***மான் மதத்தின் சாந்து ஏந்தினர்***
***கண்ணி ஏந்தினர் பிணையல்ஏந்தினர்***
***கவரி ஏந்தினர் தூபம் ஏந்தினர் (20.8-15)***

*கோவலன் இறந்தது கேட்டு ஆயர்மகள் ஒருத்தி ஆயர் பாடிக்கு விரைந்து வந்தாள்.*

*அவள் தான்/ சொல்லாடாள், சொல்லாடா நின்றாள், அந்தங்கைக்குச்/ சொல்லாடும், சொல்லாடுந்தான் (18.18-10) என்று கூறித் துன்பச் செய்தியைச் சொல்ல இயலா நிலையடைந்த பெண்ணின் துயரைத் தெரிவிக்கிறார் கவிஞர்.*

*சிலம்பில் உவமை, உருவகம் முதலிய பல்வேறு நடையியல் உத்திகளும் சிறப்பாகக் கையாளப்பெற்றுள்ளன.*

**முடிவுரை**

*சிலப்பதிகாரத்திலும், தேர்ந்தெடுக்கப்பெற்ற ஆங்கில இலக்கியப் பகுதிகளிலும் கையாளப் பெற்ற நடையியல் உத்திகள் சிறப்பானவையாகவும், ஒப்பு நோக்கத் தக்கனவாகவும் உள்ளன. நடையியல் உத்திகள் இலக்கியத்தின் தன்மையை மேம்படுத்தவும், உணர்ச்சிப் பெருக்கைக் கூட்டவும், சொல்ல வந்த கருத்தை வலிமையுறச் செய்யவும் உதவுகின்றன என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாக விளங்குகிறது.*

**துணைநின்ற நூல்கள்**

1. *இளங்கோவடிகள். சிலப்பதிகாரம். பாரதி பதிப்பகம், 2019.*
2. *லீச், ஜி. ஆங்கிலக் கவிதைக்கான மொழியியல் துணை. 2014.*
3. *முர்ரி, ஜே. நடையியல் சிக்கல், 2003.*
4. *பால்கிரேவ், எஃப். டி. தங்கப் புதையல், 1996.*
5. *ரீவ்ஸ், ஜே. கவிதையைப் புரிந்து கொள்ளுதல், 1972.*
6. *ஷேக்ஸ்பியரின் அனைத்து நூல்கள்,* https://shakespeare.mit.edu.

**References**

1. Elango. *Silappathikaram*. Bharathi Publications, 2019.
2. Leech, G. *A Linguistic Guide to English Poetry*. Routledge, 2014.
3. Murry, J. *The Problem of Style*. Textbook Publishers, 2003.
4. Palgrave, F. T. Golden Treasury. Phoenix Publishing, 1996.
5. Reeves, J. *Understanding Poetry*. Macmillan, 1972.
6. *The Complete works of William Shakespeare*, https://shakespeare.mit.edu.